## சபரகமுவ மாகாண அரச சேவையில் விளையாட்டு துறைசார் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப பிரிவு 2 (MT 2 -2025) விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

சபரகமுவ மாகாண விளையாட்டுத் துறையில் விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III இன் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 12.02.2026 திகதிக்கு 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 35 வயதிற்கு மேற்படாத சபரகமுவ மாகாணத்தில் வசிக்கும் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி :- 12.02.2026

02. வெற்றிடங்களின் எண்ணிக்கை :– 05

03. ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகமைகள் :-

3.1. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்

(அ).

I. தாய்மொழி (சிங்களம் /தமிழ் / ஆங்கிலம்) , கணிதம் மற்றும் இரண்டு பிற பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

II. கல்விப் பொதுத் தராதரப் (உயர் தர ) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.(பொது ஆங்கிலம் மற்றும் பொது பரீட்சை தவிர)

மற்றும்

III. விளையாட்டு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுப் போட்டிகளில் மாகாண அளவிலான (மாவட்டங்களுக்கு இடையிலான ) போட்டிகளில் 1வது , 2வது அல்லது 3வது இடத்தைப் பெற்றிருக்க வேண்டும்.தேசிய விளையாட்டுப் போட்டிகளில் 1வது , 2வது அல்லது 3வது இடத்தைப் பெற்றிருக்க வேண்டும். விளையாட்டுச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தேசிய விளையாட்டு சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய போட்டிகளில் 1வது , 2வது அல்லது 3வது இடத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ஆ).

I. தாய்மொழி (சிங்களம் /தமிழ் / ஆங்கிலம்),கணிதம் மற்றும் இரண்டு பிற பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

II. தெற்காசிய விளையாட்டுப் போட்டி, ஆசிய போட்டி, பொதுநலவாய சபைப் போட்டி, உலக கிண்ணப்போட்டி அல்லது ஒலிம்பிக் போட்டிகளுக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருத்தல்.

04. பொதுத் தகைமைகள்

(அ) 12.02.2026 திகதிக்கு விண்ணப்பதாரர் சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்தர வதிவிடமில்லை எனின்,விண்ணப்பதாரியின் கணவர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.

(ஆ). சிறந்த நடத்தை மற்றும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ). விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.

(ஈ). 12.02.2026 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 18 வயதிற்கு குறையாத 35 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

05. இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்

25.03.2025 திகதியுடைய பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 10/2025 அமைவான, முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பப் பிரிவு 2 (MT-2-2025) சம்பளத் தொகுதி MT 2-2025 ஏற்ப விளையாட்டு உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டமானது ரூ.50,630-10x 630 -11 x 670- 10 x 1,010 -10 x1,190 – 86,300/- ஆகும்.இதற்கு மேலதிகமாக அரசினால் காலத்திற்கு காலம் வழங்கப்படும் பிற கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

06. இந்தப் பதவி நிரந்தரமானது.ஓய்வூதியம் பெறத்தக்கது.

07. ஆட்சேர்ப்பு முறை :-

எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சை அடிப்படையில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் தகுதி வரிசைக்கமைய பொது நிர்வாக சுற்றறிக்கை15/90 விதிமுறைகளின் படி தகுதியின் அடிப்படையில் காணப்படும் வெற்றிடங்கள் அளவிற்கு இணைக்கப்படுவார்கள்

குறிப்பு –

எழுத்துப் பரீட்சையில் பெற்ற மதிப்பெண்களின் தேர்ச்சி அடிப்படையில் , ஆட்சேர்ப்பதற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிகமான விண்ணப்பதாரிகள் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

தொழில்சார் பரீட்சைக்கு பரிந்துரைக்கப்படும் அனைத்து விண்ணப்பதாரிகளும் அவர்களின் அடிப்படைத் தகுதிகளைப் பரீட்சிக்க ஒரு பொது நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சை வேட்பாளர்கள் பெற்ற மதிப்பெண்களின் கூட்டுத்தொகையின் தகுதி வரிசையின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

08.I.எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம்:-

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் | காலம் | மொத்த புள்ளிகள் | தேர்ச்சி புள்ளிகள் |
|---|---|---|---|---|
| .01. செயற்திறன் மற்றும் பொது அறிவு | தர்க்கித்தல் திறன் / பிரச்சினைகள் தீர்க்கும் திறன்/பொது நுண்ணறிவை அளவிடுவதற்கான வினாக்கள் மற்றும் வரவாறு புவியியல் , சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நிகழ்வுகள் மற்றும் இலங்கையில் முக்கியத்துவம் வாய்ந்த தகவல்கள் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் விளையாட்டுத் துறை தொடர்பான தற்போதைய தகவல்கள் மற்றும் தடகளம் மற்றும் குழு விளையாட்டுகளின் அடிப்படை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றிய அறிவைச் சோதிக்கும் வினாக்கள். | 01½ மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 02.மொழித் திறன் | வெளிப்பாடு , புரிதல் , எழுத்துப்பிழை ,இலக்கணம் ,மொழி மற்றும் கட்டுரை எழுதல் பற்றிய அறிவை சோதிக்கும் வினாக்கள். | 01 மணித்தியாலங்கள் | 100 | 40% |

இப் பரீட்சையினை சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடத்தப்படும். பெறப்பட்ட விண்ணபங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பரீட்சை நடைபெறும் நகரம் தீர்மானிக்கப்படும். பரீட்சையின் போது அடையாளத்திற்காக செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது செல்லுபடியாகும் இலங்கை கடவுச் சீட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

08.II. தொழில்சார் பரீட்சை

| தொடர் இலக்கம் | பரீட்சை / பாடப் பகுதி | அதிகபட்ச முழுப் புள்ளி | தேர்ச்சிப் புள்ளி |
|---|---|---|---|
| 01 | Drop stick (எதிர்வினை வேகத்தை அளவிடல்) | 12.5 | 05 |
| 02 | Dips (உடல் வலிமையை அளவிடல்) | 12.5 | 05 |
| 03 | Sit-ups (வயிற்று தசை வலிமையை அளவிடல்) | 12.5 | 05 |
| 04 | குனியும் சோதனை (sit&reach) | 12.5 | 05 |
| 05 | நீளம் தாண்டுதல் (standing long jump) கால்களின் வலிமையை அளவிடல் | 12.5 | 05 |
| 06 | Shuttle run (நிலைகளை விரைவாக மாற்றும் திறனை அளவிடல்) | 12.5 | 05 |
| 07 | 60 மீற்றர் ஓட்டப் பரீட்சை (60m sprint) வேகத்தினை அளவிடல் | 12.5 | 05 |
| 08 | 1000 மீற்றர் ஓட்டப் பரீட்சை (1000m Run) சகிப்புத் தன்மையை அளவிடல் | 12.5 | 05 |
| | மொத்த புள்ளிகள் | 100 | 40% |

- மேலே இலக்கம் 08 ஆக தொழில்சார் செயல்முறைகள் பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

தொழில்சார் பரீட்சைக்கான பாடத்திட்டம்

| பரீட்சை / பாடப் பகுதி | நோக்கம் | பரீட்சிக்கும் முறை | புள்ளிகள் வழங்கல் |
|---|---|---|---|
| Drop stick (எதிர்வினை வேகத்தை அளவிடல்) | எதிர்வினை வேகத்தை அளவிடல் | • ஒரு மீட்டர் கோளை எடுத்து தேர்வுக்கு தோற்றுபரின் பழக்கப்பட்ட கையில் அசையாமல் வைத்து விரல்களை விரித்து அதற்கு படும் வகையில் வைத்து கட்டளை ஒன்றுடன் அளவு கோளை விடுவிக்கும் போது அதனை உடனடியாக பிடிக்க வேண்டும் | • தேர்வுக்கு உட்படுபவரின் உள்ளங்கை கீழிருந்து அளவு கோள் கீழே விழும் அளவுக்கு கிட்டிய சென்றி மீட்டரை அளத்தல். |
| Dips (உடல் வலிமையை அளவிடல்) | வயிற்று தசை வலிமை<br>கை வலிமை | ஆண்<br>• தரையில் நீண்டு பாதங்கள் மற்றும் கைகள் தரையில் இருக்கும்படி உடலின் எடையைத் தாங்கி கைகள் மற்றும் கால்களால் உடல் எத்தனை முறை மேலும் கீழும் நகர்த்தப்படுவதை கணக்கிடப்படப்படுகிறது.<br>பெண்<br>• மேற்கூறிய உடற்பயிற்சி பெண்களுக்காக உள்ளங்கை மற்றும் முழங்கால் நீண்டி மேற்கூறிய செய்கையை செய்தல்.<br>• உடலை அசைப்பதன் மூலம் தரைக்கு சமமாக மேல் கீழாக கொண்டுவர வேண்டும்.<br>• கீழே அமர்ந்து முழங்காலை மடித்து உடலுக்கு அருகில் குதிக்காலை எடுத்து இரண்டு கைகளையும் தலைக்கு பின்னால் வைத்து ஆரம்ப நிலையில் இருந்து உடலின் மேல் பகுதியை பின்னால் மற்றும் மடித்த முழங்கை பக்கம் அசைத்தல். | • ஆரம்ப சமிக்ஞையுடன் 30 செக்கன்களுக்குள் முடிந்தவரை பல முறை சரியான இயக்கங்களைச் செய்தல் |
| Sit-ups (வயிற்று தசை வலிமையை அளவிடல்) | வயிற்று தசை வலிமை | • தரையில் உட்கார்ந்து ஆரம்ப நிலையில் இருந்து முழங்கால்களை வளைத்து குதிகால்களை உடலுக்கு அருகில் கொண்டு சென்று கைகளை தலைக்கு பின்னால் வைத்து , உடலின் மேல் பகுதியை உங்கள் முதுகு மற்றும் முழங்கால்களை நோக்கி நகர்த்தவும். | தொடக்க சமிக்ஞையுடன் 30 செக்கன்களுக்குள் செய்யப்படும் இயக்கங்களின் எண்ணிக்கையை எண்ணுதல். |
| குனியும் சோதனை<br>(sit & reach)<br>(நெகிழ்ச்சித் தன்மையை அளவிடுதல்) | நெகிழ்ச்சித் தன்மையை அளவிடுதல்<br>(Flexibility) | • 20 செ.மீ உயரமுள்ள ஒரு பெட்டியில் நிற்கவும்<br>• அளவு நாடாவுடன் உங்கள் கைகளை முடிந்தவரை கீழ் நோக்கி நகர்த்தவும்.<br>• உடலை கீழே நகர்த்தி கைகள் நிற்கும் இடத்தை குறிக்கவும். 02 செக்கன்கள் அவ்வாறு இருக்கவும். | • ஆரம்ப சந்தர்ப்பத்தில் இருந்து உடல் வளைவு வரை அளவு நாடாவில் குறித்து அதிகபட்சத்தை பதிவு செய்யவும். |

| | | | |
|---|---|---|---|
| நீளம் தாண்டுதல் (standing Broad jump) (கால்களின் வலிமையை அளவிடல்) | கால்களின் வலிமையை அளவிடுதல் (Explosive Leg Power) | • கால்களை ஒன்றாக இணைத்து ஆரம்ப கோட்டை தொடாதவாறு இருத்தல்.<br>• முழங்கால்களை சற்று வளைத்து கைகளை முன்னோக்கி நீட்டி முடிந்தவரை பாயவும். | • தொடக்க கோட்டில் இருந்து பாயும் போது மிக அருகில் பதிந்த பாத விளிம்பு வரையிலான தூரத்தை அளத்தல்.அதை அருகில் உள்ள செ.மீ 0.1 வரை கணக்கிடவும்<br>• கொடுக்கப்பட்ட அதிகபட்ச செயல்திறனை மூன்று முறை பதிவு செய்யவும். |
| Shuttle run (நிலைகளை விரைவாக மாற்றும் திறனை அளவிடல்) | வேகம் மற்றும் சுறுசுறுப்பினை அளவிடுதல் (Speed & agility) | • 10 மீ ஓட்டப் பாதையைக் குறிக்கவும்.<br>• தொடக்கக் கோடு அதைத் தொடாதபடி கோட்டின் பின்னால் நிற்கவும்.<br>• தொடக்கக் கட்டளையின் படி , தடகள வீரர் நின்று கொண்டே தொடங்கி தனக்கு முன்னால் குறிக்கப்பட்ட 10 மீ எல்லையில் தொட்டு பின்னர் மீண்டும் தொடக்க கோட்டிற்கு மீண்டும் ஓடி அந்த நிலையைத் தக்கவைத்துக் கொள்ளல்<br>• மீண்டும் முன்னோக்கி ஓடி தனக்கு முன்னால் குறிக்கப்பட்ட குறியைத் தொட்டு பின்னர் மீண்டும் தொடக்கக் கோட்டை தொடுதல். | • மேற்குறிப்பிட்ட செயற்பாட்டிற்கு எடுத்துக்கொண்ட நேரத்தைப் பதிவு செய்தல்.<br>• அருகில் உள்ள 0.01 செக்கனகளுக்கு நேரத்தை கணக்கிடுதல். |
| 60 மீற்றர் ஓட்டப் பரீட்சை (60m sprint) வேகத்தினை அளவிடல் | எதிர்வினை வேகத்தினை அளவிடுதல் (speed acceleration) | • 60 மீ 6 கோட்டினைக் குறித்தல்.<br>• தடக்கள வீரர் தொடக்கக் கோட்டின் பின்னால் நிற்றல்<br>• நடுவரின் சமிக்ஞையில் அவர்கள் நிற்கும் தொடக்க நிலைக்கு வருதல்<br>• தொடக்க சமிக்ஞையில் முழு வேகத்தில் முன்னோக்கி ஓடவும்.<br>• தொடக்க சமிக்ஞையில் நிறுத்திக் கடிகாரத்தைத் தொடக்கவும் | • இறுதிக் கோட்டிற்கு வீரர் வந்தடைவதைக் கண்டதும் நிறுத்திக் கடிகாரத்தை நிறுத்தி எடுக்கப்பட்ட நேரத்தை குறிக்கவும். காலத்தை கடைசி 0.01 செக்கனுக்கு கணக்கிடுக. |
| 1000 மீற்றர் ஓட்டப் பரீட்சை (1000m Run) சகிப்புத் தன்மையை அளவிடல் | வேகம் மற்றும் தாங்குதளை அளவிடுதல் | • 400 மீட்டர் ஓட்டப் பாதையில் 1000 மீட்டர் ஓடச் செய்தல் | • குழுக்களாக ஓடச் செய்து ஓட எடுக்கும் நேரத்தை நிறுத்தற் கடிகாரத்தினைக் கொண்டு ஓட எடுக்கும் நேரத்தை அளத்தல். |

09. விண்ணப்பிக்கும் முறை :-

9.1 இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப A-4 அளவிலான கடதாசிகளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தொடரிலக்கம் 01 முதல் 03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் இல 04 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை தமது கையெழுத்தினாலே நிரப்புதல் வேண்டும்.மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9.2. பரீட்சைக் கட்டணம் ரூ.600/- ஆகும்.இப் பரீட்சைக் கட்டணத்தை சபரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவாகுமாறு சபரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சபரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்) செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அலுவலகங்களுக்கு (தபால் அலுவலகம் , வங்கி ) பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9.3 சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 12.02.2026 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் / விரைவுத் தபாலில் **“செயலாளர் , சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு , மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி , புதிய நகரம் , இரத்தினபுரி “** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் **மூலையில் “சபரகமுவ மாகாண அரச சேவையில் விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026 “** எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் , பதவிக்குரிய தகமைகளை பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

9.4 விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கேற்ப தகமைகள் உள்ளதா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் போதுமான தகமைகள் இல்லை என அறியப்படின் , அவரது அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும். இவ் விண்ணப்ப அறிவித்தலில் அடங்காத ஏனைய விடயங்கள் இருப்பின் அவை தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும்.. இங்குள்ள சிங்கள மற்றும் தமிழ் அறிவிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால் சிங்கள மொழிமூல அறிவிப்பிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இவ்வாட்சேர்ப்பு அறிவித்தலின் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிராகரித்தல் தொடர்பான இறுதித் தீர்மானமும் இவ் ஆணைக்குழுவுக்குரியது.

டபிள்யு.ஆர்.தினீஷா எஸ் ரத்னாயக,

செயலாளர்,

சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

சபரகமுவ மாகாணம்

09 .01.2026

W.R. Dinisha S. Rathnayake
Secretary
Provincial Public Service Commission
Sabaragamuwa Province

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சபரகமுவ மாகாண அரச சேவையில் விளையாட்டு துறைசார் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் (முகாமைத்துவ உதவியாளர் ) 2 தொழில்நுட்ப பிரிவு -MT 2 -2025) விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

---

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பரீட்சைக்கு தோற்ற விரும்பும் நகரம்

இரத்தினபுரி

கேகாலை

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் – 1

தமிழ் – 2

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

01. அ). விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் : - (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ+ம் GUNAWARDHANA M.G.B.S.K.)

..........................................................................................

ஆ). முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) ..........................................

இ). முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..........................................

ஈ). தேசிய அடையாள அட்டை இலக்கம்

உ). தொலைபேசி இலக்கம்

02. I. நிரந்தர முகவரி: - ..........................................

II. விண்ணப்பப்படிவம் அனுப்பவேண்டிய முகவரி -..........................................

..........................................................................................

III. நிரந்த வதிவிட மாவட்டம் :- இரத்தினபுரி கேகாலை

IV. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 2026.02.12 சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர பதிவுக் காலம் :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

நீங்கள் சபரகமுவ மாகாணத்தில் வதியாதவர் எனின் துணைவர் சபரகமுவ மாகாணத்தில் வதிபர் எனக் குறிப்பிடுக . ..........................................

03. I. பால் :- பெண் 1

ஆண் 0

உரிய இலக்கத்தினை எழுதுக

II. பிறந்த திகதி : -

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

III. 2026.02.12 ஆம் திகதிக்கு வயது:-

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

04. கல்வித் தகைமை

4.1 க.பொ.த (சா.த) பரீட்சை தொடர்பான விபரம் (பெறுபேறுகளின் பிரதியினை இணைக்க)

வருடம் : ............................ சுட்டெண் : ..................................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4.2 க.பொ.த (உ.த) பரீட்சை தொடர்பான விபரம் (பெறுபேறுகளின் பிரதியினை இணைக்க)

வருடம் : ............................ சுட்டெண் : ..................................

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

4.3 தொழில் தகைமை :

ஆட்சேர்ப்பு செய்வதற்கான அறிவித்தலுக்கு அமைய தேசிய போட்டிகள் மற்றும் சர்வதேச போட்டிகளுக்கு இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்தல் அல்லது சாதனைகளின் விபரங்கள்

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

( சரிபார்ப்பதற்காக தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

05. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு எண் : ..........................................
பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம் : ......................................

| |
|---|
| பற்றுச்சீட்டை பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டவும்.<br>( பற்றுச் சீட்டின் நிழற்பட பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக் கொள்ளவும் ) |

06. விண்ணப்பதாரியின் உறுதியுரை

........................................ ஆகிய என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கியுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என சான்றுப்படுத்துகின்றேன்.என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரிய வந்தால் என்னால் விண்ணப்பிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட நியமனம் தொடர்பாக என்னுடைய உரிமையை கவனத்த்திற் கொள்ளாததுடன், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் முடியுமென நான் நன்கு அறிவேன்.அத்துடன் பரீட்சை இடம்பெறுவது தொடர்பாக விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன் என இத்தால் அறிவிக்கினறேன்.

.............................. ........................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிபடுத்தல்

( தேவையற்ற வசனத்தை நீக்கவும்)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி./செல்வி./ .................................... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ,அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் .................................... ஆந் திகதி வைத்தார் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

உறுதிபடுத்தும் உத்தியோகத்தர் முழுப் பெயர் : ........................................................

கையொப்பம் : ..................................................
பதவி மற்றும் பதவி முத்திரை

(இச் சான்றிதழ் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர் , சட்டத்தரணி , பகிரங்க முப்படையின் அதிகார தரத்திலுள்ள அதிகாரியொருவர் , பொலிஸ் சேவையில் வர்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றில் , அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியில் உள்ள அதிகாரியொருவரினால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.)

**அரசாங்கத்தில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்கள தலைவர் சான்றிதழ்**

திரு./திருமதி./செல்வி./ ............................................ தற்போது ...................... அமைச்சில் / திணைக்களத்தில் / நிறுவனத்தில் நிரந்தர ஓய்வூதியமுள்ள பதவியொன்றில் சேவையில் உள்ளார் என்பதனையும் , அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதனையும் , ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்படவில்லை என்பதனையும் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானது என்பதனையும் உறுதிபடுத்துகின்றேன்.இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கேற்ப நிறுவனமொன்றுக்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போதைய பதவியில் இருந்து விடுவிக்கலாம் என்பதனையும் பரிந்துரைக்கின்றேன்.

திகதி ............................................ ..................................................

திணைக்களத் தலைவர் கையொப்பம்
(உத்தியோக முத்திரையை வைக்கவும்)